**செய்தி வெளியீடு எண்: 714** **நாள்:29.09.2020**

**பத்திரிக்கை செய்தி**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் தமிழக அரசு விருதுகள், 3.12.2020 அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

| வ.எண் | விருதுகள் விவரம் | விருதுகள் எண்ணிக்கை | விருது விவரம் |
|---|---|---|---|
| 1 | சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர் – **1.** கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC), **2.**பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்(VI), **3.** செவித் திறன் பாதிக்கப்பட்டோர்(HI), **4.**மனவளர்ச்சி குன்றியோர்(ID), **5.** பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD), **6**.Developmental Disorder[புறவுலக சிந்தனையற்றோர்(ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD)], **7.** மன நோய் (MI), **8.**Disability caused due to blood disorder [இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச்சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD)], **9.** நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு [திசு பண்முகக் கடினமாதல் (MS), நடுக்கு வாதம் (PD)], **10.**பல்வகை குறைபாடு [Multiple Disabilities(MD)] | 10 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | சிறந்த ஆசிரியர் – (பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், செவித் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல், மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்தல்) | 3 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| வ.எண் | விருதுகள் விவரம் | விருதுகள் எண்ணிக்கை | விருது விவரம் |
|---|---|---|---|
| 4 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித் திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்) | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| | மொத்தம் | 20 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

மேற்காணும் விருதுகள் பெற, மாற்றுத் திறனாளிகளுக்கான நல ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், எண்.5, காமராஜர் சாலை, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், சென்னை – 600 005. அல்லது www.scd.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து அல்லது அந்தந்த மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் பரிந்துரை பெற்று மாற்றுத் திறனாளிகளுக்கான நல ஆணையர் அவர்களுக்கு **20.10.2020** க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் பரிந்துரை இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**